ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் இந்திய நாட்டின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் ரஷ்ய கூட்டமைப்பு கவுன்சிலின் பன்னாட்டு விவகாரக் குழுவின் துணைத் தலைவர் ஆன்ட்ரே டேனிசோவ் தலைமையிலான அதிகாரிகளுடன் உரையாடினார்.

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் 48வது கோடை விழா மற்றும் மலர்க்காட்சியினை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆகியோர் நேற்று (23.05.2025) தொடங்கி வைத்தபோது, சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் அமைச்சர் பெருமக்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் த.ஆபிரகாம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் வ.தட்சணாமூர்த்தி, வேளாண்மை உழவர் துறை வேளாண் இயக்குநர் பா.முருகேஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், மாநகராட்சி துணை மேயர் மா.சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

சேலம் ஏற்காட்டில் கோடை விழா

48வது மலர்க்காட்சி தொடக்கம்!

அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் - இரா.இராஜேந்திரன் பங்கேற்பு!

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் 48வது கோடை விழா மற்றும் மலர்க்காட்சியினை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், வனம் மற்றும் கதர்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் ஆகியோர் நேற்று (23.05.2025) தொடங்கி வைத்தார்கள்.

இவ்விழாவில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சேய்தாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து அத்தியாவசியத்தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு வகையிலான நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, கலைஞர் மகளிர் உரிமை திட்டம் மூலம் 1.15 கோடி மகளிருக்கு மாதம் ரூ.1,000/, விடியல் பயணம் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பானத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு அளவில் தோட்டக்கலைத் துறையின் மூலம் வீட்டுத் தோட்டம் அமைக்கும் திட்டத்தின் கீழ் 15 இலட்சம் குடும்பங்கள் 6 வகையான காய்கறி விதைகளைப் பெற்று ஆர்வமுடன் பயிர் செய்து பயன்பெற்றுள்ளனர்.

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் சுற்றுலாப்பயணிகளை மகிழ்விக்கும் வகையில் ஏற்காடு கோடை விழா மற்றும் மலர்க்காட்சி ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் இந்தாண்டு 48வது ஏற்காடு கோடை விழா மற்றும் மலர்க்காட்சி இன்றையதினம் தொடங்கி 29.05.2025 வியாழக்கிழமை வரை 7 நாட்கள் நடைபெறவுள்ளது. சுற்றுலாப் பயணிகள், பொதுமக்கள், குழந்தைகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் மகிழ்விக்கும் வகையில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக, தோட்டக்கலைத் துறையின் சார்பில் அண்ணா பூங்காவில் வனச்சுழல் போன்று யானை, காட்டு எருமை, முயல், குரங்கு, பாம்பு, மான், புலி போன்ற வனவிலங்குகள் உள்ளடக்கி சிகப்பு, ஆரஞ்சு, மஞ்சள், வெள்ளை வண்ண 50,000 ரோஜா மலர்கள் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அண்ணா பூங்காவில் சேலம் மாவட்டத்தின் முக்கிய நீர் ஆதாரமான மேட்டூர் அணை 16 கண் மதகு வழியாக தண்ணீர் வெளியேறும் காட்சி போல் வெள்ளை சிகப்பு, மஞ்சள் போன்ற 73,000 வண்ண ரோஜா மலர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மையின் விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தும் வகையில் வெள்ளை, மஞ்சள், சிகப்பு போன்ற வண்ணம் கொண்ட 5,640 ரோஜா மலர்களாலும், சிந்து சமவெளி முத்திரையில் உள்ள பழம்பெரும் உயிரினமான ஒற்றை கொம்பு குதிரை போன்ற உருவம் 7,000 ரோஜா மலர்களைக் கொண்டும், கோடையின் தாக்கத்தையும் மக்களின் தாகத்தையும் தணிக்க வந்த தர்பூசணி பழத்தின் உருவம் 6,280 கார்னேஷன் மலர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், குழந்தைகளை கவரும் வகையில் கார்ட்டூன் கதாபாத்திரங்களான பிக்காச்சு, சார்மண்டர் போன்ற உருவங்கள் வெள்ளை, மஞ்சள், சிகப்பு நிறம் கொண்ட கார்னேஷன் மலர்களாலும், அரசு தாவரவியல் பூங்கா I-ல் தாவரங்களின் மகரந்த சேர்க்கையை செய்யும் தேனீயின் உருவம் சிகப்பு மற்றும் மஞ்சள் நிறம் கொண்ட 5,600 ரோஜா மலர்களாலும், அரசு தாவரவியல் பூங்கா IIல் இரட்டை இதயம் போல் வடிவம் கொண்ட செல்பி பாய்ண்ட் 1,400 ரோஜா மலர்களைக் கொண்டும், ரோஜா பூங்காவில் சிறகு இதயம் போல் செல்பி பாய்ண்ட் 1,400 ரோஜா மலர்களாலும் அமைக்கப்பட்டுள்ளது.

அண்ணா பூங்காவில், தோட்டக்கலைத் துறையின் வளத்தை தெரிவிக்கும் வகையில், பல்வேறு வகையான பழங்கள், காய்கறிகள், வாசனைப் பொருட்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் அனைத்தும் திடல் அமைத்து மக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தபட்டுள்ளது. 30,000க்கும் மேற்பட்ட வண்ண மலர் தொட்டிகளைக் கொண்டு மலர்க்காட்சி அமைக்கப்பட்டு, அண்ணா பூங்கா வளாகம் முழுவதும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, ஏரி பூங்கா உள்ளிட்ட பல்வேறு இடங்களில் வண்ண மலர்களால் ஆன செல்ஃபி பாயிண்டுகள் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோடை விழா நடைபெறும் அனைத்து நாள்களிலும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வகையில் கலைப்பண்பாட்டுத்துறை, சுற்றுலாத்துறை சார்பில் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றது. அதேபோன்று, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பில் நாள்தோறும் பல்வேறு வகையான போட்டிகளும் நடத்தப்படுகின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட ஊட்டி மலர்க்காட்சியில் கடந்த 7 நாள்களில் மட்டும் 1.61 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டுள்ளனர். இதுபோன்ற பல்வேறு மலர்களால் அமைக்கப்பட்டுள்ள மலர்க்காட்சிகள் அனைவரின் மனதையும் குளிர்விப்பதுடன் மன அழுத்தத்தைப் போக்கும் வகையில் அமைந்துள்ளது. எனவே, இத்தகைய மலர்க்காட்சியை பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து சுற்றுலாப் பயணிகளும் வருகை புரிந்து பார்வையிட்டு பயன்பெற வேண்டும்.

விவசாய பெருங்குடி மக்களின் நலனில் அக்கரையுடனும், உழவர்களைப் போற்றும் அரசாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்கள்.

இவ்விழாவில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் த.ஆபிரகாம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் வ.தட்சணாமூர்த்தி, வேளாண்மை - உழவர் துறை வேளாண் இயக்குநர் பா.முருகேஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி, மாவட்ட வன அலுவலர் கஷ்யப் ஷஷாங் ரவி, மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.அ. அபிநயா, வேளாண்மை இணை இயக்குநர் ச.சிங்காரம், தோட்டக்கலை துணை இயக்குநர் திருமதி மஞ்சுளா, மாவட்ட சுற்றுலா அலுவலர் (பொ) வினோத் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், சுற்றுலாப் பயணிகள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கோதண்டன் சகோதரர் கோபிநாத் இயற்கை எய்தினார் அன்னாரின் திருஉருவப்படத்திற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ நேரில் சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் ஒன்றிய கழகச் செயலாளர் கே.ராஜேந்திரன் மற்றும் நிர்வாகிகள் ஷெரீப், பாபு உள்ளிட்ட கழக நிர்வாகி பலர் உள்ளனர்.

தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

புதுக்கோட்டை வடக்கு & தெற்கு, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, தஞ்சாவூர் தெற்கு, தஞ்சாவூர் மத்திய, கோவை வடக்கு, கோவை மாநகர் மற்றும் கோவை தெற்கு மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
24.05.2025 சனிக்கிழமை	காலை 10.00 மணி	புதுக்கோட்டை வடக்கு & தெற்கு	கற்பக விநாயகா திருமண மண்டபம், மாலையீடு, புதுக்கோட்டை.
26.05.2025 திங்கள்கிழமை	காலை 10.00 மணி	நாகப்பட்டினம்	தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம்.
	மாலை 4.00 மணி	மயிலாடுதுறை	விஜய் மஹால், தரங்கம்பாடி சாலை, மயிலாடுதுறை.
27.05.2025 செவ்வாய்க்கிழமை	காலை 10.00 மணி	தஞ்சாவூர் தெற்கு	ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை.
	காலை 10.00 மணி	கோவை வடக்கு	தாரஹா மஹால், பெரியநாயக்கன்பாளையம்.
	மதியம் 12.00 மணி	கோவை மாநகர்	கிஸ்கால் கிராண்ட் ஹோட்டல், வடகோவை.
	மாலை 5.30 மணி	கோவை தெற்கு	ஸ்ரீ தங்கவேல் அய்யன் கே.வி.கே.திருமண மண்டபம், கோவில்பாளையம் சாலை, பெரிய நெகமம்.
28.05.2025 புதன்கிழமை	காலை 10.00 மணி	தஞ்சாவூர் மத்திய	அறிஞர் அண்ணா மஹால், கீழவாசல், தஞ்சாவூர்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 22-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

ரிஷிவந்தியம் தொகுதி, மணலூர் பேட்டை கிளை நூலகம்!

வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பார்வையிட்டார்!

மணலூர்பேட்டை,மே 24- கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, வாணாபுரம் வட்டம், மணலூர் பேட்டை பேரூராட்சி கிளை நூலகத்தை தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன் 21.05.2025 புதன்கிழமை அன்று திடீரென நேரில் சென்று பார்வையிட்டார்.

அப்போது நூலகத்தில் வாசித்துக் கொண்டிருந்த போட்டித் தேர்வெழுதும் மாணவ, மாணவிகள் மற்றும் வாசகர்களிடம் தேவை பற்றி கேட்டறிந்த சட்ட மன்ற உறுப்பினர் மிக விரைவில் இந்நூலகத்தை முழுநேர நூலகமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும் என்றும், தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நவீன வசதிகளுடன் கூடிய கூடுதல் நூலக கட்டிடம் கட்டித்தரப்படும் எனவும் கூறினார்.

மேலும் இந்நூலகத்தின் வளர்ச்சிக்காக வர்த்தகர் சங்கம், அரிமா சங்கம், வாசகர் வட்டம் ஆகியவை பல்வேறு நன்கொடைகள் மூலம் கம்ப்யுட்டர், பிரின்டர், ஸ்கேனர், இன்வெர்ட்டர், யு.பி.எஸ், நாற்காலிகள், மேஜைகள் வழங்கி யுள்ளதையும், அரிமா சங்கம் சார்பில் போட்டித் தேர்வெழுதும் மாணவர்களுக்கு இலவச மாதிரித் தேர்வு நடத்தி வருவதையும் கேட்டு மகிழ்ச்சியடைந்த அவர் உடனடியாக நல்நூலகர் மு.அன்பழகனிடம் ரூ.10,000 நூலக வளர்ச்சிக்காக வழங்கினார்.

இதன் பின்னர் ரூ.22 லட்சத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் நூலக கட்டிடத்தை பார்வையிட்டார். அப்பொழுது மக்கள் பிரதிநிதிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரிமா சங்கத்தினர், வர்த்தகர் சங்கத்தினர், வாசகர் வட்டம் மற்றும் பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உள்பட பலர் உடன் இருந்தனர்.

திருவெண்ணைநல்லூர் அருகே மலட்டாற்றில் மூழ்கி

உயிரிழந்த கல்லூரி மாணவி - தங்கையின் குடும்பத்திற்கு தலா ரூ.3 லட்சம் !

ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருவெண்ணைநல்லூர், மே 24- மலட்டாற்றில் மூழ்கி உயிரிழந்த கல்லூரி மாணவி மற்றும் அவரது தங்கையின் குடும்பத்திற்கு தமிழக முதல்வர் அறிவித்த நிவாரணத் தொகையாக தலா ரூ.3 லட்சத்திற்கான காசோலையினை பெற்றோரிடம் சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் வழங்கினார்.

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றியம், அரசூர் கிராமத்தைச் சேர்ந்த பழனி மகள்கள் சிவசங்கரி (20), அவரது தங்கை அபிநயா (15), இவர்களது சித்தி ஐஸ்வர்யா மகன் கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகே உள்ள தட்டாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் மகன் ராஜேஷ் (13) ஆகிய மூவரும் 21.05.2025 அன்று திருவெண்ணை நல்லூர் அருகே அரசூர் மலட்டாற்றில் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

அவர்களது குடும்பத்திற்கு ஆறுதல் கூறி முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 லட்சம் நிவாரண உதவி வழங்க தமிழக முதல்வர் உத்தரவிட்டார், அதன் பேரில் நேற்று முன்தினம் உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் நேரில் சென்று உயிரிழந்தவர்களின் பெற்றோர் களுக்கு ஆறுதல் கூறி தலா ரூ.3 லட்சத்திற்கான இரண்டு காசோலைகளை வழங்கினார், அப்போது அவருடன் வருவாய் வட்டாட்சியர் செந்தில்குமார், திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர், மாவட்ட கவுன்சிலர் மா.சந்திர சேகரன் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் உட்பட பலர் உடன் இருந்தனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்த கலந்துரையாடல் கூட்டம் 2026 ஆம் ஆண்டு நடைபெறும் சட்டமன்ற பணிகள் குறித்து கழக துணைபொதுச்செயலாளர் அ.ராசா எம்.பி. கலந்துகொண்டு ஆலேசனைகளை மேற்கொண்டார். இதில் பகுதிச்செயலாளர்கள் எஸ். முரளி, நந்தனம் மதி, மயிலை தொகுதி பொறுப்பாளர் கோ.வி.லெனின், மயிலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், தலைமைசெயற்குழு, பொதுகுழு, வட்டகழகசெயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.